# வள்ளுவரும் காந்தியும்

மு. கோவிந்தசாமி, B. O. L. Hons.

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

59, பிராட்வே — சென்னை 1.

இரண்டாம் பதிப்பு

உரிமையுடையது.

விலை ரூ. 0—12—0.

கோவாபரேடிவ் பிரஸ், புதுக்கோட்டை.

# வள்ளுவரும் காந்தியும்

## காந்தியும் தமிழ்நாடும் :

திருவள்ளுவரே தமிழ் நாட்டு காந்தி. "காந்தி" என்றால் ஒளிதானே! இன்று காந்திஜியும் அன்று வள்ளுவரும், இந்தியாவின் அறிவொளிகள். குஜராத்தில் பிறந்த காந்திஜி அன்புஒளியைக்கொண்டு இந்தியாவிற்கு உரியராய் உலகமுழுவதையும் தழுவிக்கொண்டார்; அவர்ஒளி உலகப்பகைமையை ஒட்டிவருகின்றது. தமிழகத்தில் பிறந்த வள்ளுவர் அறிவொளியைக்கொண்டு இந்தியாவில் மட்டுமன்றி, உலகிலெல்லாம் மடமையிருளை மாய்த்துவருகிறார். மடமையும் பகைமையும் மடிந்து அன்பும் அறிவும் மக்களிடையே அரும்பி விளங்குமானால், அன்றுதான் உலகிற்கு ஒளியுண்டு; கண் உண்டு; உயிருண்டு. அவ்வொளியைக் கொண்டுவந்தோரும் ஒளிகள் (காந்திகள்) அல்லவா? உலகமக்கள் உரிமையுற்று அறிவுலகைப் படைக்குங்காலத்து இந்தியாவை நோக்குவார்கள்; குஜராத்தை நோக்குவார்கள்; தமிழ் நாட்டை நோக்குவார்கள். ஏன்? செல்வச் செருக்கெனும் (Materialism) இருளில், விஞ்ஞான-நக்ஷத்திர ஒளியே பேரொளியெனப் பெருமையோடும்சென்ற அவர்கள், வழிதெரியாமல் வாடியபோது, தாம் வருந்தி, ஆனால் அவர்கள் வருந்தாமல் நல்லவிளக்குகொண்டு அவரை நெறியில்நடத்தும் திறமையும்பெருமையும் இவ்விரு இந்திய ஒளிகளுக்கேயுண்டு.

தமிழுக்கும் காந்திஜிக்கும் தொடர்புமிகவுண்டு. இந்தியாவுக்குப் பணிசெய்யவேண்டுமானால், அங்கு வாழும் பலதிறப்பண்புடைய மக்கள் உள்ளத்தையும்

(அடிமனம்) சற்று ஊன்றியுணரவேண்டும்; அதற்கு அவர்தம் மொழிகளையெல்லாம் படிப்பதொன்றே வழி யெனக்கண்ட பெருமையானகொள்கை காந்திஜியிட முண்டு. அவற்றுள்ளும் தமிழும் வங்காளியும் அவரைத் தனித்திறனுடன் எப்படியோ கவர்ந்துவிட்டன; ஏன், அடிமைப்படுத்திவிட்டன. முன்னர் அவர் தமிழ் கற்றதை உலகமறியும்; எழுதுவார், படிப்பார்; போதிய ஓய் வில்லையே என அவர்ஏங்கியதும் யாருமறிவர். அன்று வங்காளியைக் கண்ட துன்பத்தை, வங்கமொழி கொஞ்சம் தணித்தது; விரைந்து தாகூரின் வங்கமொழியைக் கற்றார் காந்திஜி. தாகூரைப்படித்த காந்திஜி தமிழ்ப் பாரதியை நன்குஅறிவார். பாரதியின்தமிழ் அவருக்கு இனிமை தந்தது; பாடல்கள் அவருடைய தேசீய உணர்ச்சியைத் தட்டிப் புதுமையூட்டின. எட்டயபுரத்தில் நடந்த பாரதி நினைவுக்கு, அவர் வாழ்த்தனுப்பியது நமக்கு நினைவுண்டு. வள்ளுவரே தமிழ். அவரைப் படிக்காதவன் தமிழைப் படிக்காதவன்; தமிழ்மக்களை அறியாதவன். திருக்குறளைப் படிப்பதில் காந்திஜிக்கு ஆர்வமிகவுண்டு.

மொழிகள்மட்டுமல்ல. வங்கமும்தமிழ்நாடும் காந்திஜீ சார்ந்துநடக்கும் இருதோள்கள். தேசீயத்தையும், வீரரையும் தருவது வங்காளம். திறனுடையோரையும் அறிவையும் விளக்குவது தமிழகம். ஆகவே இவற்றினிடம் அவருக்குத் தனிமதிப்பும், உறவுமுண்டு. விவேகானந்தருக்கு ஊக்கமும் ஆக்கமும் உதவி, அவரை அமெரிக்காவிற்கனுப்பி உலகில் இந்தியப்புகழையோதிய பெருமை தமிழ் நாட்டிற்கேயுண்டு. அதேபோல, முதலில் காந்திஜிக்கு ஒத்துழையாமை (சத்யாக்ரகம்)க்குத் திட்ட மிட்டு வழிகோலித் தந்தது தமிழகம் (சென்னை) தான் என்பதை அவரே இங்குவந்தபோது அறிவித்தார். அதுமட்டுமன்று, தென் ஆப்பிரிக்காவில் அவர்நடத்திய முதல் சத்யாக்ரகத்தில் அவருக்கு ஊக்கமும் நம்பிக்கையு

மூட்டியவர்கள் தமிழகத்தின் "வள்ளியம்மை" என்ற வீர நங்கைதான். அவ்வம்மையை முதல்பலியாகக் கொண்டுதான் காந்திஜியின்சத்யாக்ரகம் உரிமையை வாயிலில்கொண்டுவந்தது. ஆகவே தமிழ்நாட்டிற்கு அவரிடம் மிக்க உரிமையுண்டு; பங்குண்டு.

அவர் பிறப்பில் வைணவர். வாழ்வில் 'மனிதமதம்' பற்றுபவர். 'வைணவஜனதோ' என்ற பாடல் அவர்க்கு மிக்க பிடித்தம். 'ஏழைகளின் துன்பங்கண்டு இரங்கு பவனே வைணவன்' என்ற கொள்கையல்லவா அவர் தம் வாழ்க்கை! ஆம், வைணவம் என்றாலே 'தொண்டு' என்பதே பொருள். நம்மாழ்வார் அடியாரைத் 'தொண்டர்' என அழைக்கிறார்; அவ்வைணவம் பிறந்தது தமிழ் நாட்டில். தமிழர் பண்டையநாளில் காட்டு நிலத்தில், திருமாலைக் (மாயோனைக்) கடவுளாகக்கொண்டு வாழ்ந்தமை தொல்காப்பியம்என்ற தமிழ்நூல் கூறுகிறது. அந்த திருமால் கொள்கைதான் இன்றைய வைணவம். ஆகவே அவர்க்குப் பிறப்பால்உரிய கொள்கையால்பிடித்த வைணவத்தைப்படைத்துத் தந்தது தமிழகம்.

அஹிம்ஸை (அன்பு) அவரது மூச்சு; பேச்சு. எந்தக் காலத்தில் இந்தியா அஹிம்ஸையை உணராமல் ஆடு, குதிரைகளை வேள்வியிலிட்டு அவற்றையுண்டுவந்ததோ, அதற்குமுன்பே புலாலுணவுண்ணாத அஹிம்ஸை நெறியைக்கொண்டது தமிழகம். இதனை மறைமலை யடிகள் என்ற தமிழ் மெய்யறிஞர் தமதுநூலில் நன்கு ஆராய்ந்துள்ளார். இன்றைக்கு 2000 ஆண்டுக்கு முன் தோன்றிய பத்துப்பாட்டு என்ற தமிழ் நூல், அன்று உயிர்களைக்கொன்று உண்ணாத உயரியோர் வாழ்ந்ததைக்

குறிக்கின்றது. ஆகவே அவர் தம் அஹிம்ஸையை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பற்றிவருவது போற்றிவருவது தமிழகம்.

அன்பும் உரிமையுமுடையோரிடையே ஆத்திரமும் எதிர்ப்பும்கூட எழுவது இயற்கைதானே. எதிர்க்க எதிர்க்க நட்பு வலுப்பது ஆன்றோர்களிடந்தான். அப்படி எதிர்த்தும் நட்புரிமையை வளர்ப்பது, தன்னைப் பிறர் மனதிலே பதியவைப்பது தமிழகம். இந்திமொழியை எதிர்த்தபோதும், அரசியல் கட்சிப்பிணக்கிலும் காந்திஜிக்கும் தமிழகத்திற்கும் எதிர்ப்பு. கொள்கையில் ஆகையாலே, நல்லோர் முன் ஆதலாலே, அவ்வெதிர்ப்பில் பகையில்லை. அவர் தமிழகத்தை நன்கு அறிந்துகொள்ள, அணைத்துக்கொள்ள அது உதவிற்று.

# வள்ளுவரும் காந்தியும்

காந்திஜி வாழ்வு கீதை வாழ்வு. அவர்வழி கீதைவழி. போர்க்களத்தில் எழுந்தது கீதை. அதற்கு மாறுபட்ட உரைகள் பல மலிந்து கிடக்கின்றன. காந்திஜி, கீதையில் அஹிம்ஸை அடிப்படையைக் காண்கிருர். (அனுஸக்தி யோகமென்ற நூலில்). திருக்குறள் தமிழ் கீதை. இது தமிழர் தம் வாழ்க்கைப்போரிடையே மலர்ந்தது. எப்படி விளக்கமுயன்ருலும், திருக்குறள் அஹிம்ஸையை அடியாகக்கொண்டதாகும்; ஆராய்ந்தோர் ஆர்வமுடன் இதனை ஏற்றுக்கொள்வர். ஆகவே, வள்ளுவர் காந்திஜியின் ஆசிரியர்; வழிகாட்டிகளில் ஒருவர். காந்திஜிக்கு ஆசிரியர் பலருளர். ருஷ்யநாட்டு டால்ஸ்டாய் முதன்மையான அஹிம்ஸை ஆசிரியர். ஆனல் வள்ளுவரைவிட காந்திஜி இன்று உலகில் விளக்க மடைந்திருக்கிருர். ஆசிரியரைவிட மாணவன் மிகுந்த அறிமுகமும், புகழும் உடையவனுகக்கூடாதா? இல்லை யானல் மாணவனுக்கென்ன பெருமை? ஆசிரியனை விடச்சிறந்துநிற்காத மாணவன் மாணவனல்லன். 2000 ஆண்டுகட்கு முற்பட்ட வள்ளுவர் அறிவு, இன்று எவ்வளவோ கடந்து முன்னேறிப்பெருகியுள்ளது; தெளிந் துள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளில் அடைந்த அறிவு வள்ளுவர்அறிவுடன் சேரவேண்டாமா? அப்போது எவ்வளவு பெருகும், பெருமையுறும்! அன்று வள்ளுவரைத் தமிழுலகம்மட்டும் அறியும். இன்று காந்திஜியை உலகமுற்றும் அறியும். அறிவின் விளக்கம் உலகையே அணைத்துக்கொண்டது.

உலகை நடத்துவன மூன்று ஒளிகள்: ஞாயிறு, திங்கள்; தீ, என்பன. மக்களை வாழ்விப்பன மூன்று; மொழி, சமயம்; அரசியல் ஆவன. மொழி அறிவினுலும்,

சமயம் நல்ல கொள்கைகளாலும், அரசியல் காவலினாலும் நாட்டைக்காப்பன. இந்த மூன்று துறைகளிலும் ஒளியைக்கொண்டு வருவோர் உயர்ந்தோரல்லவா? அறிவொளியைத் தமிழ்நாட்டிற்கும் சிறப்பாக உலகிற்கும் அளித்தவர் வள்ளுவர்; திங்கள்போன்றவர். சமயவொளியை ஆசியாவிற்கருளியவர் புத்தர்; ஞாயிறு ஆவார். அரசியல் உரிமையொளியை உலகிற்களித்தவர் காந்திஜி; தீ, அனையவர்.

நிலவொளியை யாவரும் உணர்வதில்லை; இன்புற முடிவதில்லை. குழந்தைகளும், கலைஞரும், காதலருமே அதனால் இன்புறுகின்றனர். ஆகவே, அது விளங்கும் போதும் சிலரே அதனைக் காண்கின்றனர். வள்ளுவரும், குறளும் அப்படித்தான். அறிவைவிழைவோர் உலகில் சிலர்தானே! படித்தோரும், அறிஞரும் தமிழன்பருமே அவரையறிவர்.

சூரியனது ஒளியைக் குகையிலும் புதரிலும் வாழ்வோர்தவிர அனைவரும் அறிவர்; ஆர்வங்கொள்வர். பகலை உணராதோர் பலர் இருக்கமாட்டார்: புத்தரும் அப்படியே. சமயமில்லாத மனிதர் உலகில் உண்டா? ஆசியா முழுவதும், இந்தியாவும் அவரையறியும்.

தீ, எல்லோருக்கும் தேவை; குகைவாழ்வோர்க்குங் கூட. ஆகவே அதனை விரும்பாதாரே இல்லை. காந்திஜி தீ, போன்றவர். உரிமையை விரும்பாதோர் யார்? அரசியலை அணுகாதோர் யாவர்? ஆகவே அவரை உலகமெல்லாம் அறியும். அவர் ஒளி உலக முழுவதற்கும் பயன்படுகின்றது. நிலவும், ஞாயிறும் இல்லாவிடத்தும் தீ வேண்டப்படுகிறது, பயன்படுகிறது. அறிவும், சமயமும் அற்றவரும் அரசியலை விரும்புவரல்லவா?

இவர்கள் கொண்டுவந்த மூன்று ஒளிகளேயும் உள்நின்று விளக்கும் ஆற்றல் (கடவுள்) அஹிம்ஸை (அன்பு)தான். ஆகவே இவர்களை ஒப்பிட்டுப் பேசுகிறேம்.

மனித உடலின் இயல்பு 'துன்பம்' என்கிருர் வள்ளுவர். மனித இயற்கைதானே மலர்ந்தஉலகின் இயற்கை. அந்த துன்பத்தைப்போக்குவதுதான் மனிதனின் மாண்புடைய செயற்கை. அதற்கே அவனுக்கு அறிவு கிடைத்திருக்கின்றது. துன்பம் நீக்கி இன்பங் காண்பதே வாழ்க்கைப்போராட்டம்; மனிதனின் நாகரிகம்.

மடமை, கொடுமை, அடிமை இவைதானே மக்கட்குத் துன்பந்தருவன. இவற்றிற்கு மாருன அறிவு, பண்பு, உரிமை இவைதானே இன்பத்தைக்கொண்டு வரமுடியும்? இவற்ருல், உலகை இன்பநிலையமாக்க முயன்ற ஒளிகளே வள்ளுவரும், புத்தரும், காந்திஜியும். மற(பலாத்காரம்) நெறியில் இன்பத்தைக்காண உலகந் தோன்றி இன்றுவரை மக்களும், ஏன், பல அறிஞரும் முயன்றுதான் வருகின்றனர். அம்முயற்சிதான் புரட்சியாக, போராக வலுக்கின்றது. ஆனல் அன்பு வழியில்தான் இன்பங்காணும் அது நிலக்கும் என, அன்றுமுதல் கூறிவரும் மெய்யறிஞர்தாம் வள்ளுவர், காந்திஜி போன்ருர். இவர்கள் தூண்டுவதும் புரட்சிதான், பெரும்புரட்சி, உண்மைப்புரட்சி, அதுதான் மனதில் புரட்சி!

# உலகின் அடிப்படை

உலகில் தத்துவ அறிஞரெல்லாம் 'நன்மை' (Good) தீமை (Evil) என்பவற்றை ஆராய்வதிலேயே காலங் கழித்துள்ளனர். வள்ளுவரும் காந்திஜியும் மெய்யறிஞர் (Philosophers) ஆவர்.

வாழ்வில் நன்மை அளிப்பனவற்றுள் முதன்மை யானது கொல்லாமை; மற்ருென்று பொய்யாமை (உண்மை) என்கிருர் வள்ளுவர். இவற்றைத்தான் காந்திஜி அஹிம்ஸை சத்தியம் என அழைக்கிருர். வாய்மை; இன்ஞசெய்யாமை; அன்பு என்ற தலைப்புக் களில் (திருக்குறளில்) வள்ளுவர், சத்தியம் அஹிம்ஸை யைத்தெளிவாய் விளக்குகிருர். உயிரும் உடலுஞ் சேர்ந்ததே மனிதன். உயிர்தான் உண்மை, உடல்தான் அன்பு. உண்மையற்றவன் உயிரற்றவன். உயிரற்ற உடல் அழிந்துபோகிறது, உண்மையற்றவன் உயிர் வாழ்வு, உலகிற்குத்தெரியாமலே மறைந்துவீணுய் விடுகிறது ஏன்? உண்மைதானே மனிதனுக்குப் புகழையும் அதன்வழி எல்லோருக்கும் அறிமுகமும் செய்கிறது.

உடல் இல்லாவிடில் வாழ்வில்லை. அன்பில்லா விட்டாலும் வாழ்வில்லை. அன்பு என்பது உடலைப் பற்றிய தொடர்பு, இரத்தத்தொடர்பு. நம் ரத்தத் தொடர்புடையாரைக் கண்டதும் அவரிடம் அன்பு; நம் நாட்டின், மொழியின், சமயத்தின், நிறத்தின், வகுப்பின் உறவுடைய பெரியோர்களுடைய இரத்தத்தொடர் புடையார் என்ருல் அன்பு. மனித உடலைக் கண்டால் மனித அன்பு, முடிவாக இயற்கைப் (கடவுள்) படைப்பில் உயிர்தாங்கிய உடல்கள்என்ற உறவால் பறவை,

விலங்கைப் பார்க்கும்போதும் அன்பு. இது உயர்ந்த அன்பு, முடிந்த அன்பு. ஆகவேதான் அன்பற்றவன் உடலற்றவன் ஆகிருன்.

அறிவும் பண்பும், உரிமையும், இன்பந்தருவன என்ருேம். இன்பம், அன்பு செய்தால்தான் ஆகும் என்கிருர் வள்ளுவர். இன்பமின்றி வாழ்வதினும் இறப்பதே மேன்மை. அன்பில்லாத உடல் அழிந்த உடல் என்கிருர். ஆகவேதான், அன்பற்ற வீண்உடல் நடமாடுவதைவிட அன்பை (அஹிம்ஸை)க்காத்து நிறுத்த அவ்வுடலையும் கொடுக்கவேண்டும்.

அன்பைக் காக்க எலும்பை (உடல்)யும் ஈந்துவிடுக என்பது வள்ளுவர் மொழி. இனிவரும் கோடிக்கணக்கான மக்களின் அன்புவிளக்கும் இன்பவாழ்விற்காக இன்றைக்குப் பலர் உடலையுந்தந்துதான் ஆகவேண்டும் என்பதனைக் காந்திஜியும் கூறுகிருர்.

துன்பம் வேண்டாமென்ருல் நாம் பிறர்க்குத் துன்பம் செய்யலாகாது. உலகு நம்மிடம் அன்பில்உறவாட வேண்டும்என விழைந்தால், நாம் அதனிடம் அன்பு கொள்ளவேண்டும். துன்பஞ்செய்துவிட்டு மாருக அன்பை எதிர்பார்ப்பது அறிவுடைய மனிதனுக்காகாது. பகைமைகொண்ட உள்ளமுடையவன், நன்றியாகப் பிறர் தன்னிடம் அன்பு செலுத்த விரும்புவது அடாது. ஆகவே அஹிம்ஸை என்பது, பிறர்க்கு மனதிலும் துன்பம் நினையாமை என்பதே இருவர் கருத்தும். இதுவே வள்ளுவர்உரைக்கும் தவம். பிறரால்வரும் துன்பம் பொறுப்பதும், தான் பிறர்க்குத் துன்பஞ்செய்யாமையுமே தவம் என்கிருர் வள்ளுவர். காந்திஜி, பிறர் மனம் புண்படப் பேசாதவர்; இன்னும், பிறர் அவர் மனம்

கோவப்பேசினாலும் துன்புறுத்தினாலும் ஆத்திரப்படாமல் பொறுத்துக்கொள்பவர். இங்ஙிலை மக்களிடை மலரும் போதுதான் 'மனிதத்தன்மை' உலகில் மலருகிறது.

பொறுத்துக்கொண்டால் போதுமா? எதிரியைத் திருத்தித் தன்வழிக்கு நல்வழிக்குக் கொண்டுவர வேண்டும்; அழும்படி, இடித்துந்திருத்தலாம். ஆனால் அன்பு நெறியில் திருத்தவேண்டும். அதுதான் புரட்சி; மாறுதல். உண்மை (சத்யம்) உடையவனுக்கே அந்த உறுதியிருக்கும். மற்றவர் கூறியமையால், அடக்கு முறையால் அடிமைத்தனத்தால், பின்வாங்குவர். அவர் வாழ்வு பொய்வாழ்வு; அது உலகில் புரட்சியைக்கொண்டு வராது; உரிமையைக் கொண்டுவராது.

உண்மை விளங்க உரிமை விளங்கும். உரிமை விளங்க இன்பம் விளங்கும். உண்மையொளி அடிமை, அடக்கு முறையால் மறைக்கப்பட்டுவிடும்; அணைக்கப்பட்டுவிடும். அறிஞர் நினைத்த உண்மைகளை (நன்மை) அடிமை நாட்டில் செயலுக்குக் கொண்டுவர முடிவதில்லை. அப்படியே உண்மைக் கொள்கைகளை, அடக்குமுறையும் பாதுகாப்புச்சட்டமும் உடைய அரசாங்கத்தில் பேசக்கூட முடிவதில்லை. செய்யமுடியாத உண்மை மறைந்துவிடுகிறது; பேசமுடியாவிடில் அணைந்து விடுகிறது. அடிமையும் அடக்குமுறையும் அற்ற உரிமை நாட்டில்தான் உண்மை விளங்கும்; அன்பு பரவும்; இன்பஞ்செழிக்கும்.

ஆகவேதான், காந்திஜி சத்திய சோதனை நடத்தினார். அவர் நெறி சத்திய நெறியாயது. வள்ளுவரும் வாழ்வை ஆராய்ந்தார்; உலகில் உண்மையானது நிலைத்தது எது என நீண்ட நாள் உலகையெல்லாந் தேடினேன். (வாய்மை) சத்தியத்தைத் தவிர வேறு ஒன்றையும் கண்டேனில்லை என முடிவு கட்டுகிறார்.

# கடவுளும் சமயமும்

உண்மை, அன்பின் உருவாகவே கடவுளைக்காண்பவர் காந்திஜி. சத்து (உண்மை) சித்து (அறிவு) ஆனந்தம் (இன்பம்) இவையேகடவுள் என்கிறது உபநிடதம். 'இன்பமே என்னுடை அன்பே' என்றனர் தமிழ் நாயன்மார். 'ஞான வேள்வி நல்லறஇயல்பினன்' என்கிறார் ஆழ்வார். கட்டற்று, கடந்து உரிமையாய் நிற்பது கடவுள். ஆகவே உரிமை வேண்டுவோர் அதனை உணர்கின்றனர். உண்மையெனில், என்றும் உள்ளது; அழியாது நிலைத்தது. நிலைத்த இன்பத்தையும் அழியாத அமைதியையும் ஆறாத நல்லுறவை (அன்பு)யும் இன்று உலகம்விழைகிறது. அதற்கு, மாறாத உரிமை ஒவ்வோர் நாட்டிற்கும் மனிதனுக்கும் வேண்டும் என உணர்கிறது. என்றும் இருக்கவேண்டிய இவற்றை, என்றும் உள்ள இவைகளை உணர்ந்துதானே எய்தவேண்டும். உள்ளதைத் தரும் அவன், உண்மைவடிவினன்.

ஆறாத உறவைநாட்டும் அவன் அன்புருவினன். ஆண்டவன் எனில் அஹிம்ஸை சத்தியம் என்ற அழகிய கொள்கையைக் காந்திஜியிடம் கண்டுதான் கடவுளைப் பற்றியும் சமயத்தைப்பற்றியும் கவலையேகொள்ளாத நேருவும், காந்திஜியின் கடவுளைக் கொஞ்சம் கருதிப் பார்க்கிறார் (Discoveries of India). உண்மை, அன்பில் உயருமானால் அந்த சமயம் உலகிற்கு ஆறுதலளிப்பதே என நேரு ஒப்புக்கொள்கிறார். அறிவும் அறமும் இருந்தால்தான் உண்மையும் அன்பும் ஓங்கும். அறிவால் உண்மை விளங்கும் அறத்தால் அன்பு பரவும். வள்ளுவர் இறைவனை 'வாலறிவன்' 'அறவாழி அந்தணன்'

என்கிருர். ஆகவே மூட நம்பிக்கையும், எல்லாம் இறைவன் செயலென்ற சோம்பலுமுடையவாய்ப் பல நூற்ருண்டுகளாகப் பழகிப்போன இன்றைய உலகச் சமய வாழ்க்கையன்று, வள்ளுவரும் காந்திஜியும் உரைக்கும் சமயம்.

அது செயலே, தொண்டினை வற்புறுத்துகிறது; அதாவது அறத்தை வற்புறுத்துகிறது; ஏன், அறிவை வற்புறுத்துகிறது. ஆங்கிலேயன் ஆண்டாலென்ன இந்தியன் ஆண்டாலென்ன, உழைத்தவன் வறுமையில் வாடுவதும் விதி என்று கோழையாய் மடிந்துகிடக்கும் மூடத்தனத்தை யழித்து, எளிமையை விரும்பும் அறிவுடைய மனிதசமயம் அவர்கள் காண்பது. காந்திஜியின் வாழ்வு முழுவதும் இந்தியாவின் உரிமைக்கே உழைத்துக்களைத்தது என்ருல் அங்கு சோம்பலும், மடமையும் சாய்ந்துவிட்டன. வள்ளுவர், மனிதன் செய்ய வேண்டுவது சமயச்சடங்கு கடவுள்வழிபாடு என்பதைக்கூட வற்புறுத்தவில்லை; ஆனல் அறம்; அறம் (தொண்டு) என்கிருர். தவிர்க்கவேண்டுவது பழியொன்றே என்கிருர். உரிமைப் போராட்டத்திலேயே என்சமயம் அடங்கியுள்ளது; அதிலேயே என் கடவுளைக்காண்கிறேன் எனத்தானே காந்திஜி கருதினுர். உலகச்சமயங்கள் இப்படிமாறுமானல் யாரே அவற்றைஎதிர்ப்பர். ஏளனஞ்செய்வர்?

# நாடும் உரிமையும்

மக்களுக்குப் போதியநிலமும், நாட்டில் வாழும் குழந்தைகள் இளைஞர் பெண்கள் பெரியவர்கள் உழவர் தொழிலாளர் யாவரும் மனிதத்தன்மையுற்ற நிலையும், உடையதே நல்ல நாடு. அங்கு பசியிராது; நோய் நாடாது; பகை தலைகாட்டாது. இதுவே உரிமை நிலை. இந்தியா. இத்தகைய உரிமை நிலையை எய்த வேண்டுமெனத்தான் இவ்விரு பெரியோரும் எண்ணுகின்றனர். ஆனால், நமக்கு நிலமிருந்தும் வளம் படுத்த வகையில்லை; நல்ல விளைவில்லை. குழந்தைகள் இளமையிலேயே இறக்கின்றன.

இளைஞர், நாட்டின் நாகரிகத்தை, அறிவை மறந்து ஏதோ பலகற்றுக் கோழைகளாய்க் கிடக்கின்றனர். பெண்கள் அடிமைகளாய், ஏழைநாட்டில் பிள்ளைபெறும் கருவிகளாய்க் கையாளப்படுகின்றனர். பெரியவருள் 90 பேர் எழுதப்படிக்க இயலாதவர், உழுதும் போதியது கிடைக்காமல், அதுவும் ஆண்டுமுழுதும் போதாமல் அல்லற்படுகிறான் உழவன். எண்ணிலாச் செல்வத்தை ஏழைத்தொழிலாளி, முதலாளிக்குப்படைத்தளித்தும் 'இன்னும் இரண்டணு மேலே போட்டுக்கேட்க' உரிமை யற்று வலியற்றுப்போனான். பணக்காரரும் படித்தவரும் இது 'ஆங்கிலேயருக்குரிய நாடுதான்' என அறிவற்று மானமற்று அறை கூவினர். இவைதான் ஒரு நாட்டின் உண்மை நிலையா? உரிமை நிலையா? இந்நிலையில் நூறு நூறு ஆண்டுகள் அடங்கி மடிந்து செல்வதா ஆண்மை யுள்ள அறிஞர் கடன்? அறியாமை சோம்பலையும் அச் சோம்பல் அயலார்க்கு நம் குடும்பத்தை அடிமையாகவும் ஆக்கிவிடும் என்றார் வள்ளுவர். ஆம் இந்தியர் குடும்ப மாகிய நம் நாடு அடிமையானதிப்படித்தான். உணர்ச்சியும்

அறிவும் விழிப்பும் கொண்டார் காந்திஜி. இங்கிலே உண்மை (சத்யம்)க்கு மாறுனதைக் கண்டார். உண்மையற்றுல் அன்பு ஏது? பிளவுகள் நாட்டின் நலனுக்குக் களைகளாய் விடுகின்றன.

அடிமையும், மடமை வேற்றுமையை யன்றி ஒற்றுமையையா உண்டாக்கும்? நாட்டின் அன்பு அறுந்து போகிறது. நாட்டில் யாரும் ஒன்றெனநினைக்கும் தொடர்பு (அன்பு) மறைந்து 'குடும்பச் சண்டை' சாதி சமயப்பிணக்கு, ஏழை முதலாளிப்பிணக்குகள் எழுகின்றன. இன்பம் சாய்ந்து இன்னல் உயர்கிறது. இது அஹிம்சைக்கு முரணுவதைக் கண்டார் காந்திஜி.

நாட்டினர்படும் நலிவைக்கண்டு நெஞ்சதிர்ந்து கண்ணீர்விடுபவனே அறிவுடையவன், மனிதன் என்கிருர் குறளில். இந்த நெஞ்சுபடைத்த காந்தி மகாத்மாவாணுர். உண்மை அன்பென்றுல் உயிரையும் கொடுப்பதல்லவா? நாட்டினிடம் பற்றுக்கொண்ட அவர் வீட்டைத்துறந்து வாழ்வையே உரிமைப்போராக மாற்றிஞர். நாட்டின் அடிமையை அறுப்பதே ஆண் மகன் கடமை எனப்புறநானூறு பேசுகின்றது. 'களிறெறிந்து பெயர்தல் காளைக்குக்கடனே, என்ற வரியை எண்ணுங்கள். ஒரு மனிதன், அடிமைநாட்டில் பிறந்தால், அங்கு முன்கூறிய நன்மைகளை நாட்ட வாழ வேண்டும், இவைதான் முதன்மையான மனிதக் கடமை. காந்திஜி அக்கடமையில் தலைநின்றுர்.

எனது நாட்டினர் இன்பத்தை (நன்மையை), உரிமையை எண்ணி நடப்பதே எனது சத்திய சோதனை வாழ்வு என்கிருர்.

நம் நாட்டில் நிலமுண்டு; அறிவுண்டு பண்பட்ட நெஞ்சுண்டு; பண்டைய நாகரீகப் பெருமையுண்டு; கலையுண்டு; தொழிலுக்கு வேண்டும் இரும்பும் கரியும் ஈயும் கனிகளுண்டு; இயற்கை எழிலுண்டு. பின் ஏன் இத்தனை துன்பம்? நாட்டின் மக்களுக்கும் அரசுக்கும் இணக்கமில்லை; விளங்கச்சொன்னால் உரிமையில்லை. ஆகவே சூழ்ந்தது கேடு. அந்நிலை அகலவேண்டுமென்று தான் அழுத்தமாயுரைத்தார் வள்ளுவர். மற்ற துறைகளில் மாண்பு பெறினும், அரசும் மக்களும் அன்பால் இணையாத நாடு அழியும் என நாட்டைப்பற்றிக் குறிக்கிறார் குறளில். அவர் கூறுவதே உரிமைநாடு; அங்குதான் உண்மை நிலையும் ஒற்றுமையும் பண்பும் ஓங்கும். அந்த உண்மை (சத்ய) அன்பு (அஹிம்ஸை) நெறியைத்தான் நாட்டினார் காந்திஜி; வள்ளுவராக வாழ்ந்தார்.

# பொருளும் தொழிலும்

பொருளே இவ்வுலகவாழ்வின் மூச்சு என்பது இருவரின் எண்ணமும். ஆகவே இவர்கள் பொருள், மனைவி மனையைத்துறந்த போலிகளல்லர். ஆனால் மனதில் உண்மைத்துறவு பூண்ட உயரியோர். அதுதான் பற்றற்ற வாழ்வு. நாட்டின் நலனைநாடி ஓடும் எவனும், தன்னலனை மறந்தேவிடுகிறான். தனக்கு நிலைத்த வீடு, நல்ல சோறு, ஆடம்பர உடை, புகழ் இவற்றைக்கருதியதே இல்லை. லெனினும் கருதவில்லை; ரூசோவும் கருதவில்லை. கருதினால் அவ்வாழ்க்கை வராது; அவ்வளவுதான். இப்படி நாட்டில், மனதில் (தன்னலம்) பற்றின்மைதான் வள்ளுவர் கூறும் அறத்துப்பாலின் உண்மை.

இருவரின் பொருளாதார, தொழில்திட்டங்களும் முதலாளிக்கு அடிமையற்றதும், உழைப்பவனுக்கே உரிமை என்ற கொள்கையும் ஆகிய அடிப்படையுடையன. மனிதன் வாழும், இந்நிலையைப்படைக்க வேண்டுமானால், விலங்கியல்பா (இரத்தப்புரட்சி)லன்றி மனிதத்தன்மையா (அன்பு; அஹிம்ஸை நெறி)லேயே புரட்சி நடக்கவேண்டும் என்பதே இவர்கள் கோட்பாடு.

ஆனால் வள்ளுவர், கயவர்கள் கையை முறுக்கிக் கழுத்தைத்திருகினாலன்றி ஒன்றையும் உதவமாட்டார் என உணர்ந்துள்ளார்; அதாவது இரத்தப்புரட்சிக்குப் பின் இணங்குவதே பணவெறியென்னும் கயமை கொழுத்த முதலாளிகளின் இயல்பென்பதை ஒப்புக் கொள்கிறார். ஆனால், அவர்களுடைய விலங்குத்தன்மை கொண்டே அதனைத் திருத்தினால் நாட்டின் பொருளாதாரம் பெருகினாலும் உயர்ந்த மனிதத்தன்மை யன்று என்பதே அவர்கள் உள்ளம்.

உழவைப் (தொழில்)பற்றிக் கூறுகையில் குறள் பிறரிடம் தொழுதுண்டுபின்செல்லும் தொழிலாளி நிலையை வெறுக்கிறது. அதாவது உழைப்பவன் முதலாளிக்கடிமையல்லன். அத்தொழிலில் தனக்கும் பங்குடையனும் முதலாளியுடன் ஒப்பானவன் என்ற இன்றைய பொதுஉடைமையின் அடிப்படையெண்ணம் அவரிடம் காண்கிறேமல்லவா? குடிப்பது கஞ்சியானாலும் தான் வருந்தியுழைப்பதில் அது கிடைக்குமானால் அதுவே அமிழ்தம் என்கிறார். ஆகவே உழைக்காமல் வீணில் உண்டுகளிப்போரை அவர் நிந்தனைசெய்கிறார். முதலாளியும் உழைத்து அந்த ஊதியத்தால் உண்டு இன்புற்றால் அதுதானே பொதுவுடைமை? அங்கு இரு வகுப்பு ஏது?

அடிமையற்ற, எல்லோரும் உழைக்கும் இந்நிலை வருமானால் முதலாளித்துவம் அழியும்; எல்லோருக்கும் வேலை கிடைக்கும்: இன்பம் பொதுவாகும்: உள்நாட்டிலும் அடிமை ஒழியும். இவைதான் காந்திஜியின் கருத்தும். குடிசைத்தொழில் வளர்ச்சியில், அவரது தர்மகர்த்தா பொறுப்புத்திட்டமும் இக்கொள்கைகளைக்கொண்டே எழுகின்றன. பணக்காரர் உலகில் கொழுத்ததும், வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்ததும், உலகப்போர்கள் தொடர்ந்ததும் பெருவாரி இயந்திரப்பெருக்கத்தாலும், தொழில் (Centralised) திட்டங்களாலுமே என்பதனை எந்தப் பொருளாதார அறிஞனும் ஒப்புகிறான். பின்னர் ஏன் அதனை மறுப்பதில் தயக்கம்.

இயந்திரமும் அதனால் தொழிலும் வளரக்கூடாதென்பதல்ல, ஆனால் அவை நாட்டை அழிக்கக்கூடாதென்பதே காந்திஜியின் துடிப்பு. அதற்காகவே முதன்மையாகக் குடிசைத்தொழில் வளர்ச்சியும் அளவாக இயந்திரப் பெருக்கமும் இருக்கலாம் என்கிறார்.

ஜமீன்தாரி, தொழில் முதலாளித்வம் ஒழியவேண்டும், ஆனால் சிலகாலம் கட்டுப்படுத்தி அவர்களைக்கொண்டே தர்மகர்த்தா (Trustee System) திட்டத்தால் நம் குறிக்கோள் முடியுமா என முயற்சிக்கவே அவர் விரும்பினார். ஆகவே இது கொள்கைவேறுபாடன்றி, பொருளாதாரம் அறியாமையன்று.

பிச்சையேற்று உண்ணுமாறு அந்தப் பிரமன் படைத்தால் அவன் அலைந்து அழிக! இந்தக் குறளை அறியாத தொழிலாளியும், தமிழரும் இல்லை. பகுத்துண்டு பல்லுயிரோம்புதல், ஏழைகள் பசிதீர்த்தலே எண்ணிலாச் செல்வத்தின்பயன், கோடியிருந்தும் கொடுத்துண்ணா தவன் வாழத் தகுதியற்றவன் என வள்ளுவர் உரைத்த தெல்லாம் அவனைக்கொண்டே தர்மகர்த்தா ஆட்சி நடத்தும் அன்றைய பொருள் தத்துவங்கள்தாம்.

முறையில் முரண்பாடிருப்பினும், உழவரும் தொழிலாளரும் உரிமையுடன் சரிநிகர் மக்களாய் உண்டு களித்து உயிர்வாழ வேண்டுமென்பதே அவர்களின் பொருட்கொள்கையின் வேராகும். தனக்குரியதை எடுத்துக்கொண்டு மற்றதைப் பங்கிட்டுவிடவேண்டும் என்பதுதானே பொதுவுடமை? தேவைக்கதிகமாகத் திரட்டி வைப்பவன் திருடன் என்கிறார் காந்திஜி. பணக்காரன் செல்வம், பழமரம்போல, ஊர்நடுவே குளம்போல, மருந்திற்குதவும் மரம்போல, மக்கட்குப் பயன்படவேண்டுமென்கிறார் வள்ளுவர். இந்த கொடையுள்ளவன் தனக்குப்போக மற்றதைத் தொகுத்துவைக்க முடியுமா? ஏன், தனக்குள்ளதையுமன்றோ உதவவேண்டி வரும்? ஆகவே பொதுவுடமை வளர எந்த எண்ணத்தின் அடிப்படை தேவையோ, அந்த அடிப்படை அவர்களிடம் உண்டு என்பதனை ஐயமற அவர்தம் வாழ்வும் நூலும்

விளக்குகின்றன. இந்த அடிப்படையுடன் நம் நாட்டின் உண்மையறிவும் பண்பாடும் பொருளும் ஒற்றுமையுமாகிய, அழகிய தேசியம் வளரவேண்டுமெனவே அவர் 19 கிராமச் சீரமைப்புத் (Village Reconstructive Programmes) திட்டங்களை வகுத்தார்; வள்ளுவர் திருக்குறளை இயற்றினர்.

# ஒற்றுமையும் உலகுரிமையும்

வள்ளுவர் காலத்தில் தமிழ்நாடு வடவேங்கடம் வரைதான்: அதாவது ஏறைக்குறைய சென்னை மாகாணம். அப்போதே அவர், முரண்பட்ட கொள்கையுடைய பல கூட்டங்களும், உட்பகையுடையோரும், கொல்குறும்பரும் நாட்டினை அழித்து விடுவர் என்கிறார். அதில் பின்கூறிய உட்பகையும், குறும்புத்தனமும் இல்லாவிடில் பல கொள்கையினரின் கூட்டங்கள் இருப்பினும் குற்றமில்லை என்றகருத்து உண்டென உணரலாம். பல கொள்கையில் உட்பகையும் குறும்பும் ஏற்படுவது இயற்கை என்பதற்கே அப்படிக் கூறுகிறார். ஆனால் பல கொள்கையினர் இருப்பினும், முறை மற்ற கொள்கை இவற்றால் வேறுபட்டாலும் அடிப்படைக் கொள்கைகளை ஏற்று அங்கு ஒன்றுபட்டுழைத்தால் அப்பகையும் குறும்பும் அணுகா.

இந்தியாவின் பல கட்சிகளும், இந்தியவிடுதலை, பொருள் முன்னேற்றம், அறிவு பண்பு வளர்ச்சி, மக்கள் ஆட்சி இவ்வடிப்படையை மறுக்கமாட்டா. இங்கு ஒன்றுபட்டால் இன்று நாட்டிற்கு நலிவில்லை; வீண் பகையும் அழிவுமில்லை.

வள்ளுவர் காலத்திலேயே, ஒரு மாகாணத்திற்கே பிரிவு கூடாதென்றார் எனில், 2000 ஆண்டின்பின் இந்தியப்பெருநாட்டிற்கு அவ்வொற்றுமை எவ்வளவு தேவை? இன்று உலகம் ஒன்றாய் ஐரோப்பியப் போர் இந்தியக் கிராமத்தைத் தாக்குகிறது; அன்று அலேக்சாந்தர் போர் அப்படியில்லை. அணுகுண்டு உலகையே அழிக்கநிற்கிறது. ஆகவே பாதுகாப்பு, பொருள் வளர்ச்சி இவற்றிற்காகவேனும் இந்திய ஒற்றுமை தேவை. பிறமாகாணத்தைச் சார்வதால்

தனக்குப் பொருளாதாரமெலிவு ஏற்படுவதுமுண்டு. சில வகையில் வளர்ச்சியுமுண்டு. அவ்வளர்ச்சிக்குரிய முறையில்மட்டும் பிற மாகாணத்தொடர்பு பயன்படும். எவ்வளவு முன்னேறினுலும், ரஷியா, அமெரிக்கா, இங்கிலாந்து இவற்றின் படைவலியை நாம்பெற எத்தனை ஆண்டுகளாகுமோ? இவை நடந்த போரில் ஒவ்வொன்றும் தனித்து நின்றிருந்தால் என்னவாயிருக்கும்? இன்று லண்டன் இருக்குமா? ரஷியா இவ்வளவு விரைவில் வென்றிருக்குமா, சொல்லமுடியாது. ஆகவே இனி, பாது காப்புக்காகக் கண்டிப்பாய் இந்தியா ஒன்றுபட்டிருத்தல் வேண்டும். இதுதான் காந்திஜியின் முயற்சி. அன்றுதான் உலக நிலையில், நாம் அடையப்போகும் உரிமை நிலைக்கும். இல்லையானுல், என்றும் உள்நாட்டுப் போர்; நாட்டின் உயர்ச்சியில் தேக்கம்; அடிமை நீடிப்பு இவைதான் உண்டாகும். பிரிவினையே தொழிலாகக் கொண்ட சர்ச்சில், ஐரோப்பிய ஐக்கியநாடுகள் ஏற்படுத்தச் சொல்கிருரெனில், அப்புறம் கேட்பானேன்!

இருவர் கூறும் சாதியும், அறிவால் சிறப்பால் பிரியும் சாதிகளே. இன்றைய சாதிகள் ஒழிந்து 'வரும் உலகில் அறிவால் வேறுபாட்டைப் பெருமையுடன் காக்கும் மக்களைக் காண்போம் என்கிருர் அரவிந்தர். இன்று ரஷியாவினும் அறிவில் வேறுபாடுண்டு; கலைஞர், விஞ்ஞானிகள் மேம்பாடுற்றே விளங்குகின்றனர். வள்ளுவரும், அறிவும் தொழிலுங்கொண்டே சாதிகளைக் குறிக்கிருர்; ஆனுல் பிரிக்கவில்லை. முடிவில் எல்லா மக்களும் பிறப்பால் ஒன்றே என்கிருர். ஆகவே சாதி வகுக்கும் இன்றைய வெறித்தனத்தை அவர்கள் வெறுக் கின்றனர். உரிமையுள்ள மக்கள் உயர்ந்த சாதி; அடிமை யுடையோர் யாவரும் இழிந்தோரே (சூத்ரர்) என்கிருர்

காந்திஜி. என்றும் உலகில் 'அறிஞரும், அரசு நடத்து வோரும், வாணிபஞ் செய்வோரும், தொண்டுசெய்வோரும் இருந்தேதீருவர். இவர்கள் இன்றைய பிராம்மணர் முதல் வேளாளர், ஆங்கிலேயர், யூதர், நீக்ரோ அனைவரிலும் உண்டு.' இக்கருத்தில்தான் காந்திஜி வருணாசிரமத்தைக் கூறுகிறார் எனவே யான் நம்புகிறேன். இந்த ஒற்றுமை நிலவாவிடில் உரிமை வந்தாலும் அங்கும் அடிமைதான்.

## சிக்கல் இல்லை

வள்ளுவரின் வாய்மையிலும், காந்திஜியின் அஹிம்ஸையிலும் பலருக்கு ஐயமுண்டு. குற்றமற்ற நன்மை விளையுமானால் பொய்யும் மெய்யேயாகும் என்கிறார் வள்ளுவர். அதற்கென, நாலணாவும் எனக்கு நன்மைதானே என, நாளைக்கு நானூறு பொய் சொல்லலாம் என்பதன்று. நேரு, காந்திஜிபோன்றோர் உயிரை ஒரு பொய் சொல்வதால் காப்பாற்றலாம் என்றால் அதுபோன்ற அரும்பெருஞ் செயல்களுக்கே, பொய் மெய் யாகும்என்பதே அவர்கருத்து. கோழையாய்விடுவதைவிட, ஓடியும் சாவதைவிட பலாத்காரத்தாலாவது எதிர்க்கலாம் என்றார் காந்திஜி. இதனால் அவர் அஹிம்ஸைக்கு இழுக்கில்லை. கோழையாய்ச் சாவதினும், வீரனாகச் சாவதுமேல். அச்சாவு அன்பினாலோ பலாத்காரத்தினாலோ வரலாம். அன்பினால் ஏற்பதே என்வழி; இல்லையானால் பலாத்காரத்தாலேனும் வீரத்தைக் காப்பாற்றுங்கள் என்றே காந்திஜி கூறுவது.

ஆன்றோர் எழுதுவதிலும், பேசுவதிலும், இருக்கும் நிலை அல்லது, இருக்கவேண்டிய நிலை (Idealism) இவற்றுள் ஏதேனும் ஒன்றோ இரண்டுமோ விளக்கப்படும். வள்ளுவர், போர்ப்படை வீரர்பற்றிக் கூறுகிறாரே அவர் நெறி அன்பாகுமா எனில், அது அன்றைய நிலையை விளக்குகிறார் எனவே கொள்ளவேண்டும்; கீதையில் போரைக் குறித்ததும், அன்றைய நிலையைக்கொண்டு விளக்கியதாகவே காந்திஜி கருதுகிறார் அப்போரிலும், அன்பையே இருவரும் வற்புறுத்துகின்றனர். ஆண்மை என்பது அஞ்சாமை, அதுவும், பகைவன் போரில் வீழ்ந்து துன்புற்றால் அங்குஉதவுவதே வீரஞ்சிறக்கும் வழி என்றார் குறளில். இருநூறாண்டாக எவ்வளவுதான் அவர்கள் நம்மைத்துன்புறுத்தினாலும் நசுக்கினாலும் அழித்தாலும் நடந்தபோரில் ஆங்கிலேயர் துன்புற்றதைக் கண்டு அகமுருகினார் காந்திஜி. ஆகவே அவர் தம் வாய்மையும், அன்பும் மாசற்றன.

# மொழியும் முன்னேற்றமும்

மனிதன் மொழி வளர்ச்சியடைந்த பிறகே அறிவில் உயர்ந்தான்; அதனுல் பண்பாடும் நாகரிகமும் பெருக்கினுன். நாகரிகம் வேண்டுவோரே உரிமை கேட்கின்றனர். ஆகவே கிடைக்கும் உரிமையால் நம் நாடு நிமிரவேண்டின், மொழி முன்னேறவேண்டும். ஆகவேதான் காந்திஜி ஆங்கில மொழியின் அடிமை யிலிருந்து விலகவேண்டும், ஆங்கிலச் சொற்களை அறவே விலக்கி இந்திசொற்களைக் காணவேண்டும் எனத் துடித்தார். வள்ளுவரும் அப்படியே. குறளில் பிற சொற்கள் 5%கூடக்காண்பது அருமை. நமக்கு இருக்கும் சொற்களை மறந்து பிற சொற்களைக் கலந்து எழுதுவது தேசியப் படையில் நம்நாட்டு வீரனை விலக்கிவிட்டு அயலானை அமர்த்துவதுபோலத்தான். இந்தியப் படையில் ஆங்கிலேயன் ஒருவன்கூட இருக்கும்வரை அடிமைதான் என்றேமல்லவா?

அப்படியே, நம்மொழிச் சொல் ஒவ்வொன்றும் மொழியைக் காக்கும் ஒரு வீரன். அந்த இடத்தில் அதை விரட்டி ஒரு அயல் சொல்லைப் புகுத்துவதும் அடிமைத் தனம். எந்தக் கருத்திற்கு நம்மிடம் சொல் இல்லையோ அதற்கு வேறு மொழித்துணை கொள்வதில் பகையில்லை. இந்த எண்ணம் இருவருக்குமுள்ள இனிய தேசீயம்.

ஆரவார உடை, உணவு, காட்சிகள், இன்பவிருப் பங்கள் உலகை அழித்தன, நடந்த போர்களைத் தூண்டின. வெறும்சொல்லும் வீண்செயலும்கூட ஆரவாரம் என்கிருர் வள்ளுவர். அறிவில்லாத வெறும் அழகை அவர் வெறுக்கிருர். ஏழைகளை உயர்த்த வேண்டின் எளியவாழ்வு வேண்டும். உண்பது நாழி, உடுப்பது இரண்டே என்பதுதான் தமிழர் பண்பு. ஒழுக்க

மில்லாமல் காவி பூண்டு தாடிவைத்தவனைக் கண்டிக்கிறார் குறளில். ஆகவே மனதில் உண்மையாய் வெளியில் எளிமையாய் வாழ்வதே அவர் விருப்பம். தட்டிக் குடிசையும், முட்டிக்கால்வரை துணியுமே காந்திஜியின் எளிமைக்குச் சாட்சிகள். நான்கு மாடியில், பட்டாடை மெத்தையில் சாய்ந்து, வாழும் பணக்காரன் ஏழைகளை உயர்த்தும் இனியமனம் படைக்க இயலாததைத்தான் காண்கிறோம். அங்கு இரக்கமுள்ள மனம் அமைதல் மிக அருமை. இம்மனம் அமைந்தபின் வேண்டின் அப்படி வாழலாம்; அப்புறம் மனமாற்றம் நேராது.

**இயற்கைச்சிகிச்சை :** மருத்துவரற்ற நாடும் வீடும் வாழும். இயற்கை வாழ்வே ஏற்றந்தரும். உணவுக்கட்டுப்பாடே உண்மை மருந்து. காந்திஜி, உணவு கொள்ளுமுறை உயர்ந்தது. மனிதனின் மேலான குணங்கள் உணவாலேயே அமைகின்றன. இதை கீதையும் கூறும். வள்ளுவர், மருந்தில் உணவு சீர்திருத்தத்தையே உரைக்கிறார். உணவு திருந்தினால் உடல்திருந்தும்; உயிர்திருந்தும்; வாழ்வு திருந்தும். பெரிதும் நோயில்லை. ஆகவே, இயற்கை முறையை அவர்கள் விழைகின்றனர்.

# பெரியோர்

மேலே விளக்கிய எல்லாத்துறைகளிலும் அஹிம்ஸையும் சத்தியமும் அடிப்படையாய், மணிமாலையில் நூல்போல நிற்பதைக் காண்கிறோம். இவர்கள் பெரியார்; சான்றோர் (வழிகாட்டிகள்). எல்லோராலும் செய்வதற்கரியதைச் செய்வார் பெரியர். வள்ளுவர் தந்த குறள் அரியது. தமிழில் அதுபோன்ற நூல் இதுவரை இல்லை. இந்திய உரிமை அரியது. அதனைக்கொண்டு வந்த பெருமை காந்திஜிக்கு உண்டு. குணம் குற்றத்தை ஆராய்ந்து குணம் மிகுந்திருந்தால் நல்லோர் என நம்புவதே வள்ளுவர் கூறும்முறை. நம்மிடம் பெரும் பான்மை தீமையும், சிறுபான்மை நன்மையும் உள்ளன. பெரியோரிடம் உள்ளசெயல் எண்ணங்களில், பெரும் பான்மை நன்மையும் சிறுபான்மை தீமையுமாக இருக்கும். காந்திஜிக்கும் நமக்கும் கருத்து வேற்றுமையுண்டு. அவரிடம் குறை இருக்கலாம், ஆனால் மிகக்குறைவு. வள்ளுவர் வாழ்விலும் அப்படியே இருந்திருக்கும். ஆனால் அவர்களிடம் நன்மைமிகஉண்டு. ஆகவே, அவர்களைப் பின்பற்றி நாம் பெரியோராகவேண்டும். பெரிதும் நன்மையுடையவனே மனிதன். குறையே அற்றவனாக இருக்கவேண்டுமென்பதன்று. மனிதஇனம் மீண்டும் மலர்ச்சியடைய இத்தகைய உயர்மனிதர் (Superhuman) வாழ்வை உணரவேண்டும்; ஆராய்ந்து தீரவேண்டும். அதனால் பெரும் பயன் உண்டு.

**சத்தியம் :**

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற — **சத்தியம்.**

**அஹிம்ஸை :**

எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானா
மாணாசெய் யாமை தலை — அஹிம்ஸை.

# ஐர்லாந்தின் மகாத்மா

'அறிவினால் ஆகுவதுண்டோ பிறிதின்நோய் தன்னோய்போல் போற்றாக்கடை' யெனத் திருவள்ளுவர் கூறுவதும், 'ஏழைகளிடம், அவர்கள் துன்பத்தைக்கண்டு இரக்கங்கொள்பவனே மகாத்மா' என விவேகானந்தர் கூறுவதும் இந்தியாவின் உள்ளமாகும்.

நாட்டில் ஏழைகள் தாழ்நிலையைச் சுதந்திரமிருந்தாலன்றிப் போக்க முடியாதெனக் கண்டால், அதற்கெனத் தன் வாழ்வையே (உயிரையே) சுதந்திரப்போருக்களிப்பவனும் மகாத்மா. இல்லையேல் அவன் இரக்கம் உண்மையாகாதல்லவா? ஏன், அப்போரில் உலகிலுள்ள பெரும்பான்மையோர் வியக்கத்தக்க, எதிர்க்கத்தக்க ஆனால் முடிவில் தலைவணங்கி ஏற்கத்தக்க (முடியாவிடினும்) உண்மை நெறிகளைக் காண்பவனும் மகாத்மாதான். இம்மூன்று வகையிலும் சான்றாக நிற்பவர் இன்று உலகில் யாவர்? மகாத்மா காந்தி யென்பதை இன்னுமா உணரவில்லை? இதற்குமுன்? ஏசு, புத்தர், டால்ஸ்டாய் முதலியோர். ஆனால் ஐர்லாந்தில் 'டெரன்ஸ்மாக்ஸ்வினி' என்ற மகாத்மா ஒருவர் இருந்தார். அவர் தம் இதயப் பண்பு, சொல், ஏன் செயல்கூட நமது மகாத்மாவின் இதயம், சொல், செயல்களாகவே ஒன்றிநிற்பதனைக் காண்பதே இக்கட்டுரையின் முயற்சியாகும். மகாத்மா காந்தி மாக்ஸ்வினியின்மொழிகளுக்குள் உள்ளாரா? அன்றி, மாக்ஸ்வினியின் மொழிகள் காந்தியடிகளிடமிருந்து வெளிவருகின்றனவா? சொல்ல இயலாது.

இவ்விருவர் தம் வாழ்க்கையும் பலவகைகளில் ஒன்றுபடுகின்றன. தம் நாட்டுணர்ச்சியினை; உலக நன்மைக்கு அழிவுதராத வழியில் வளர்த்துவாழ்பவர்கள்;

கலாசாலைப்படிப்பும், அதற்கியைந்த மெய்யறிவும், பண்பும் மேம்பட்டு அதன்பயனை நாட்டின்சுதந்திரத்திற்கு அளித்தவர்கள் இவ்விரு மகாத்மாக்களும்.

இங்கிலாந்தின் பிடியிலிருந்து ஐர்லாந்தை விடுவிக்கத் தன்உயிரையே விட்டவர் மாக்ஸ்வினி. அதே இங்கிலாந்தின் அடியிலிருந்து இந்தியாவை வெளியே இழுத்தவர் மகாத்மா. இருவர்க்கும் எதிரிகூட ஒருவரே தான். ஆங்கிலத்தை நீக்கி, நாட்டு மொழியை உயர்த்து வதிலுங்கூட இருவரும் ஒன்றுபடுவர். இந்தியாவிற்கு ஹிந்தி பொது மொழியாக, மகாத்மா உழைத்தார். ஐர்லாந்தின் கெயிலிக்மொழியைப் பரப்ப 'கெயிலிக் இலக்கியச் சங்கம்' கண்டவர் மாக்ஸ்வினி. அதற்கென, அச்சங்கத்தார் ஒவ்வொருவரும் ஒரு மோதிரம் அணியவும், அம்மோதிரம் அணிந்தோரெல்லாம் கெயிலிக்மொழியிலேயே பேசவும் ஆங்கிலத்தை மறக்கவும் செய்தவர் மாக்ஸ்வினி. கிரீஸும், ரஷியாவும் வாழ வந்த சாக்ரடீஸ், டால்ஸ்டாய் ஆகியோரின் மனைவியரைப்போலன்றி, இவ்விருவரின் மனைவியரும் கணவரின் தேசப்பணியே தமது உண்மையான காதலின்பமெனக்கொண்டு, உறுதுணையாயும் ஒன்றுபட்டும் வாழ்ந்தனர். இதனினும் ஒரு அறிஞன் வாழ்வில், துணையும் இன்பமும் வேறு யாவை?

நாடு திருந்த, பகைவர்தம் வஞ்சமழிய, பன்முறை உண்ணாவிரதமிருந்தவர் மகாத்மா. தமது நாட்டின் விடுதலைக்காகவே சிறை செய்யப்பட்டு அங்கேயே 72 நாள் உண்ணாவிரத முடிவில் உயிரை விட்டார் மாக்ஸ்வினி.

இங்ஙனம், தம்நாட்டின் உரிமையொளி காணவும், அதனை அணைத்த ஆங்கிலேயரை அஞ்சாமல் எதிர்க்கவுமே தாம் பிறந்ததெனக் கருதி வாழ்ந்த மகாத்மாக்களைப்பற்றி

ஆராய்வதும் அவர்களை வழிபட்டு வழிகாட்டியாகக் கொள்வதும், உலகின், சிறப்பாக இந்தியரின் விடுதலைக் குரிய வழியாகும்.

இனி இவர்கள் சுதந்திரம், போர்முறை, வெற்றி இவற்றைப்பற்றி எங்ஙனம் அணுவும்மாருத ஒரே முடிவினைக்கொண்டு வாழ்ந்தார்கள் என்பதனைக் காண்போம். மாக்ஸ்வினியின் 'சுதந்திர தத்துவம்' என்ற நூல், காந்தியடிகளின் 'யங் இந்தியா' கட்டுரைகள் (காந்தி சூத்திரங்கள்) இவற்றிலிருந்து கீழ்வரும் மேற்கோள்கள் கடைந்தெடுக்கப்பட்டன.

1. **சுதந்திரம் :—** மனிதனுக்கு வேறு பெயர் சுதந்திரம் எனலாம். விலங்கன்றோ உரிமையற்றது? மனிதனுடைய மூச்சும், உயிரும் சுதந்திரமே. திலகர் 'நாம் உயிரோடிருக்கச் சுதந்திரம் வேண்டும்' என்கிருர். நாட்டின் உயர்ந்த பெருமைக்குரியபண்பும், அறிவுவிளக்கமும் அடிமையில் ஏது? ரஷியாவின் ஜார் ஆட்சியையும், இன்றைய நிலையையும் நினையுங்கள். ஜெர்மன், ஜப்பான் இன்றைய அடிமை நிலையில் எங்ஙனம் உள்ளன? நேற்று உலகையே ஒடுக்கும் வல்லமையுடன் நின்றது எதன் வலிமையினுல்? மகாத்மாக்கள் என்ன சொல்லுகிருர்கள்?

'சுயராஜ்யம் நம் பிறப்புரிமை. சுயராஜ்யம் என்பது வேறொருவர் (ஆங்கிலேயர்) ஆட்சியினின்றும் விலகிய முழு அரசியல், பொருளாதார உரிமையாகும். அரசியல் சுயாட்சியெனில் இங்கிலாந்தின் முறையோ, அன்றி சோவியத் ஆட்சி முறையோ அப்படியே பின்பற்றப்பட வேண்டும் என்பதல்ல நான் விரும்புவது. ஆனுல், மக்களின் நீதிநெறியின் அடிப்படையில் அமையும் ஜன நாயக 'ராமராஜ்யமே' அதுவாகும். இந்நிலையடைந்த இந்தியா, உலகிற்கே நிலைத்த, உருவான அமைதியையும், முன்னேற்றத்தையும் காண உதவும்.' — **காந்தி.**

'காருண்ய மூர்த்தியான கடவுள் ஒவ்வொரு நாட்டிற்கும் சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறார். பிற நாடுகளின்மேல் எவ்விதச்சார்பும் இல்லாமல் இருப்பதுவே சுதந்திரம். பொருளாசையும் ஏகாதிபத்திய மோகமுங் கொண்ட இங்கிலாந்து நல்ல நோக்கத்தைப் பெறுவது அருமை. அது செய்த கொடுமைகளை முற்றிலும் மறப்பதற்கு இன்னும் பலதலைமுறை செல்லும். நாம் அடிமைப்பட்டிருக்கும்வரை நம்மால் இங்கிலாந்துக்கு அனர்த்தந்தான். இதுபற்றிச் சந்தேகமே வேண்டாம். நாம் பூரணமுன்னேற்றம் அடைவதற்கும், இங்கிலாந்தோடு முடிவானசமாதானம் பெறுவதற்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலிருந்து பிரிந்துவிடுவதே வழியென்று நம்புகிறோம். பிரிந்து, நமக்குள் சமத்துவம் ஏற்பட்டால் அதனால் இங்கிலாந்துடன் நட்பும், அன்பும் ஏற்படலாம். அந்நிய ஆட்சி தீமையின்வளர்ப்புப் பண்ணை. எல்லா நாடுகளும் சுதந்திரமாக இருந்தால் அதுவே உலகப் பாதுகாப்பு. ஆகவே எல்லா நாடுகளும் சுதந்திரமடைய வேண்டுவது அவசியம். மட்டில்லாத பொருளாசை, மெலிந்தோரை நசுக்கும் சக்தி, ஒழுங்கீனமான இழிந்த அரசியல் ஆகியவற்றை விரும்பிச் செல்லும் உலகிற்கு நாம் நற்புத்தி புகட்டுவோம். அத்துடன் நமது அருமைத் தாய்நாட்டில் உண்மையான சுதந்திர அரசியலை நிறுவுவோம். அவர்களைப் பின்பற்றி செழிப்படைவதிலும், இதர நாடுகளால் நசுக்கப்பட்டு அழிவதே மேலாகும்.'

— மாக்ஸ்வினி.

2. **தாய்மொழிக் கல்வி :**— தாய்மொழிப் பற்றிலிருந்தே ஓர்நாட்டின் உயர்வினை, உரிமையுணர்வினை அறிந்துவிடலாம் அதனால்தான் ஓர் நாட்டை அடிமைப்படுத்தத் தாய்மொழியை அழிக்கின்றனர். மெக்காலே முறை எத்தகையது? அத்துடன், பிறமொழி மோகமும் கலந்தால்?

நம், 'தாய்மொழியின் இடத்தில் ஆங்கிலத்தைப் புகுத்தியது நமக்கும் ஆங்கிலேயருக்குமுள்ள தொடர்பில் நிகழ்ந்த மிகப்பெரிய வருந்தத்தக்க அத்தியாயமாகும், ஆங்கிலேயரின் கல்வி முறை நம் மாணவரின் நரம்பு, பண்பு ஏன் உயிரையே அழித்துவிட்டது எனலாம்.'

— காந்தி.

'நமது தாய்மொழியின்மூலமே முழு ஆற்றலையும் பெற முடியும். தாய்மொழி இலக்கியம் சுதந்திரத்தின் கோயில், அதன் கோட்டை, வெற்றிக்கொடி, ஏன், அதன் உரிமைச் சாசனம். ஆங்கில நாகரிகத்தை ஏற்றுக் கொள்ள விரும்புபவன் இங்கிலாந்துக்கே போய்விடுவது சிறந்தது. அவன் இந்நாட்டில் பிறந்தது உண்மையாயின் இங்குள்ள நிலைமையில் ஆங்கிலஉள்ளத்துடன் வாழ முடியாது. அவனை இங்கிலாந்தும் கைவிட்டுவிடுகிறது; இந்த நாடும் கைவிட்டுவிடுகிறது. நம்மில் சில வகுப்பார் தேசப் பொதுப் பாஷையை ஏற்றுக்கொள்ளாமல் அதன் இடத்தில் ஆங்கிலத்தை வைக்கவிரும்புகின்றனர். அவர்களுக்கு நாம் தெளிவுபடுத்த விரும்புவது, தாய் நாட்டின் பொருட்டு நமது ஜனசமூகம் முழுமைக்கும் பொதுவானதாயும் இந்நாட்டில் பிறந்த ஒவ்வொருவர்க்கும் அவசியமானதாயும் உள்ள தாய்மொழியை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதே.' — மாக்ஸ்வினி.

3. **சுதந்திரப் போரும் அஹிம்ஸையும் :—** நீரினுள்ளிருந்து வெளிவர ஒருவன் எங்ஙனம் தவிக்கிருனோ, அங்ஙனமே அடிமைத்தளையை அறுத்தெறியவும் துடிக்கவேண்டும். இது அவன் கடமையும், கட்டாயமும் ஆய்விடுகிறது. அவனுக்கு வழிகாட்ட நாட்டில் வீரர் என்றும் உள்ளனர். அவன் செயலிற் சிறந்தவனுதல் வேண்டும். அத் தகையோரே விரைவில் நாட்டை விடுவித்து உயர்த்தியிருக்கிருர்கள்.

'அஹிம்ஸையைக் கடைப்பிடித்தால் அதுவே சிறந்த வீரம். அங்கு கோழைத்தனத்திற்கிடமில்லை. அதுவே வலிமை. நம் சுதந்திரத்தையடைய நான் அஹிம்ஸையைப் பரப்புகிறேன். அதுவே வெல்லமுடியாத படையாகும். அது ரிஷிகளுக்குத்தான் உரியதென்பதன்று; பொது மக்களுக்குங்கூட அது கைக்கொள்ளத்தக்கதாகும். அஹிம்ஸையும் உண்மையும் பிரிக்க முடியாதபடி இணைந்தவை அஹிம்ஸையைக் கடைப்பிடிக்க முடியாமல் கோழையாய் இருப்பதினும் பலாத்காரம் மேலானது. ஒரு சத்யாக்கிரகி தன் ஒழுக்கத்தாலும், துன்பத்தை ஏற்பதாலும் எதிரியை மாற்றிவிடுகிறான். சத்யாக்கிரகிக்குப் பகை மனிதனல்ல, அவனிடமுள்ள தீய இயல்புகளே. எதனையும் மறைவாக நடத்துவது பாவம் எனக் கருதுகிறேன். அதுவும் மிகச் சிறப்பாக அரசியலில் அது கூடாது.'

— காந்தி.

'எவ்வித பலாத்காரத்திற்கும் பணியாமல் நிமிர்ந்து நிற்கும் மனிதன் மனதிலும் நெஞ்சிலும் ஒரு பெரிய சக்தி இருக்கிறது. அதையே 'சத்திய சக்தி', 'ஒழுக்கவன்மை', 'பண்பின் வலிமை' என்கிறோம். அதையே நான் 'சத்திய சக்தி' என்னும் அழகிய பெயரால் அழைக்கிறேன். பலாத்காரம் தனியே பெருமையுடையதன்று. அது சத்திய சக்தியினுடைய ஆயுதமாக இருந்தால் நியாயமாகின்றது. சத்திய சக்திக்கு எதிரிடை பலாத்காரம் அன்று. ஆனால் கோழைத்தனமே. சத்திய சக்தியுடையவன் தன் சுதந்திரத்திற்காகமட்டுமன்றி எதிரியை நல்ல நிலைக்குத் திருப்பவும் போராடுகிறான். நாம் பலாத்காரத்தினால் பழைய அமைப்பை மாற்றிப் புதியதோர் அமைப்பை ஏற்படுத்த வேண்டியதில்லை. அத்தகைய புதிய அமைப்பு முன்னதைக் காட்டிலும் நல்லதாயினும் கொடுங்கோன்மையாக இருக்கும். உண்மையை

மறைக்கவோ நசுக்கவோ முடியாது. நம்முடைய நன்மைக்காகவே நாம் எல்லாவற்றையும் வெளிப்படையாக அறிவித்து விடவேண்டும். நமது கொள்கை செயலில் நடத்தக்கூடியது எனக் காட்டிவிட்டால் எல்லோர் உள்ளத்திலும் மிகுந்த உணர்ச்சி ஏற்பட்டுவிடும். விடுதலையடைந்து உலகத்து நாடுகளின் இடையே உன்னத ஸ்தானத்தைப் பெறுவதற்காகத் தனது கடைசியான சுதந்திரப் போரை நமது தேசம் ஆரம்பித்துவிடும்.'

மாக்ஸ்வினி.

4. தொண்டர் (சுதந்திரப் போர் வீரர்):— ஓர் நாட்டின் மக்கள் திறமையிலேயே அந்நாட்டின் உரிமை நாட்டப்படும். கட்டுப்பாடும், வீரவுணர்வுங் கொழுத்த வீரர் அவ்வுரிமைப் போரின் வெற்றிக்குக் காரணமாவர். உடன், நடத்துவதற்குத் தகுந்த தலைவர்களும் அமைந்துவிட்டால் பகைவன் தோல்வியைத் தலைவணங்கி வரவேற்பான், மனிதனுக்கு வெற்றியைக் கொண்டு வருவது நெஞ்சுரமன்றி உடலுரமன்று.

'எனக்கு, மதமில்லாத அரசியல் வேறானதாகும். நான் சன்மார்க்கம் கலவாத அரசியலை வெறுக்கிறேன். அரசியலிலும் அஹிம்ஸையைப் பயன்படுத்துவது முடியும். குடும்பத்திற்கு வேறு, தேசத்திற்கு வேறு சட்டம் இல்லை. சத்யாக்கிரகியின் வெற்றி அவன் தூய்மையிலும், விரதத்திலுமே உள்ளது. பேச்சு, ஆடம்பரம் இவற்றைவிட, அமைதியான, அஹிம்ஸை-சத்தியங்கலந்த செயலே நிலைத்த பயனைத்தரும் என்பதில் அவனுக்குறுதி வேண்டும்.'

— காந்தி.

'ஒருவன் ஒரு காரியத்தில் யோக்கியனாயும் மற்றொன்றில் அயோக்கியனாகவும் இருக்க முடியாது. நமது கொள்கை பூரணமாயும் தெளிவாயும், பொருத்தமாயும்,

திருப்தி செய்யக் கூடியதாயும் இருக்கவேண்டும். தேசத்திற்கு உண்மையான ஊழியஞ்செய்ய வேண்டுமானுல் அவன் தனி வாழ்க்கையில் நற்குணங்களைப் பயிற்சி செய்துகொள்ளவேண்டும். ராஜ்யமும், குடியரசும், கூட்டமும் நம்மைப் புணருத்தாரணம் செய்யமுடியாது. பண்படுத்தப்பட்ட நல்ல மனமும் உயர்ந்த கொள்கையுமே சுதந்திரத்தைக்கொண்டு வந்துவிடும். சுதந்திர யுத்தத்திலே கைப்பலத்தைக் காட்டிலும் மனுேபலமே அதிக அவசியம். ஒவ்வொருவரும் பொறுமையும், வீரமும், உறுதியும் பெறுமாறு பழகவேண்டும். பல போலி மனிதரைவிட உண்மையான சிலரால் அதிக வேலை செய்ய முடியும். வெகு காலத்துக்குப் பின்னுல் வரப்போகும் சந்ததியார் அனுபவிக்க வேண்டிய இன்பத்திற்காக நாம் இப்போது உழைக்க வேண்டும். கொடுமைகளையும், ஏமாற்றங்களையும் ஏற்கப் பழகவேண்டும். நமக்கு ஏற்படக்கூடிய அயர்வு பயங்கரமாயும் இருள் மயமாயும் தோன்றும். உலக ஏகாதிபத்தியங்களின் சேனையே ஒன்று சேர்ந்தாலும் ஓர் உண்மையான மனிதனுடைய ஆத்மாவை அடக்க முடியாது. பட்டாளங்கள் தோல்வி அடைந்தாலும் ஆன்மா தோல்வி அடையாது; என்றும் எதிர்த்தே நிற்கும்.'

— மாக்ஸ்வினி.

5. **கொள்கை உரிமை** :— எதிர்க் கட்சியின் கொள்கைகளைப் பொறுமையாக அறிந்து ஆராய்வதும், நல்லதாயின் நன்றியுடன் ஏற்றுக்கொள்வதும், தன் கொள்கை தவருனதென எடுத்துக் காட்டுவார்களாயின் அதனை நாட்டின் நன்மைக்காக உடனே விட்டுவிடுவதுமே உண்மையான அறிவும், வீரமும், தொண்டுமாகும். ஒரு நாட்டின் விடுதலை, இத்தகைய பண்பு வளர்வதின் விரைவைப் பொறுத்தேயிருக்கிறது. இதற்கு மாருன

வரும், கட்சியும், வளர்வது சுயநலத்திற்காகவன்றி உண்மையான நாட்டின் முன்னேற்றத்திற்காக இருக்க முடியாதென்பது உறுதி.

'ஒழுக்கத்தின் தலை சிறந்த சட்டம் ஒருவர்க்கொருவர் பொறுத்துக்கொள்ளுந் தன்மையேயாம். நாம் எல்லோரும் ஒரே மாதிரி நினைக்கமுடியாது. நாம் என்றும் உண்மையின் பகுதிகளையே, அறிவின் பல்வேறு நிலைகளிலிருந்து காண்கிறோம். எல்லோருடைய மனப்பாங்கும் ஒரே தரப்பட்டதன்று.

— காந்தி.

'நாம் எதிரான அபிப்பிராயம் உடையவர்களைத் தாக்கிக்கொண்டிருக்கவேண்டும் என்பதில்லை. நமது கொள்கையில் உறுதியுடன் இருந்தால்போதும். நடு நிலைமையில் நிற்கும்போது நாம் பிறருடைய கொள்கைகளைப் பழிக்கவில்லை. நம்முடைய கொள்கைகளையும் பழிக்க இடங்கொடுக்கவில்லை. அவரவர் கொள்கையை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு பரஸ்பர மரியாதை காட்டுகிறோம். இது மிக உயர்ந்த பெருமையுடைய விஷயமாகும். ஒருவன் ஏளனம் செய்து ஏசிவிட்டால் உயிரோ அன்றி மானமோ போய்விடுவதில்லை. இவ்வாறு ஆத்திரத்தையும் பகையையும் அடக்கி வந்தால், ஒவ்வொரு தடவையும் நமது சக்தி பெருகும். தனிக்கட்சிகளாயிருந்தாலும் நாம் சுதந்திரமாக ஒத்துழைக்கமுடியும். உள்ளே பிளவை வைத்துக்கொண்டு வெளிக்கு ஒரே கட்சியாக இருப்பதனால் கெடுதியே விளையும்.

— மாக்ஸ்வினி.

6. பிரிவினை (அல்ஸ்டர்):— 'முஸ்லீம் மக்கள் ஒன்று சேர்ந்து பிரிய விரும்பினால் (பாகிஸ்தான் கேட்டால்) அதனைத்தடுக்க உலகில் எந்தச் சக்தியாலும் முடியாது.

ஆனால் நான் இந்தியாவைத் துண்டாட விரும்ப மாட்டேன். அது இந்தியாவுக்கே அழிவுள்ளதாகும்.'

— காந்தி.

'நமது தேசத்திலுள்ள கட்சிகளை உறுதியான மனத்துடன் சமாதானப் படுத்துவதே சுதந்திரப் போராட்டத்தில் நமக்கு முதல் வெற்றியாகும். பலமதத்தினர் ஓர் உயர்ந்த கொள்கைக்காக—தாய்த் திருநாட்டின் விடுதலைக்காக—ஒன்று சேர்ந்தால் அவர்கள் மத நம்பிக்கைக்கு என்ன கேடு வந்துவிடும்? எல்லோரையுங் காக்கும் ஓர் உயர்ந்த விஷயத்தை, ஒரு வீரக் காரியத்தை, ஓர் அழகிய கனவை, அவர்கள் ஐக்கியமாக நின்று உணர்வதை அவர்களின் மதங்கள் தடை செய்யவில்லை.'

— மாக்ஸ்வினி.

7. எளிய வாழ்க்கை :— நாட்டில் தனி மனிதனுக்குரிய பொருளாதாரத்திற்கு மேம்படாத வாழ்வே எளிய வாழ்வெனலாம். அதனை மீறினால் பிறநாட்டைச் சுரண்டவும், போர்களைத் தூண்டவும் காரணமாகிறது. இங்கிலாந்தின் போக்கு அத்தகையதே. நாடு சுதந்திரமடையும் வரையிலாவது, முதலில் ஒருவன் எளிய வாழ்வினைப் பயில வேண்டும்; அவனது சுதந்திரப் போர் அதுவேயெனலாம்.

'பொருளைக் குவிப்பது (தனக்கே) இழிவானதும் பாவமானதுமான செயலாகும். ஆனால் அதனைத் தக்க வழியில் செலவிடும் உயர்ந்தபண்பு இருக்குமானால் அதுவும் இருக்கலாம்.'

— காந்தி.

'சிலர் ஆடம்பரமாக வாழ்கிறார்களென்றால் அவர்கள் அதிகார வர்க்கத்திற்கு அடிமைப்பட்டுவிட்டனர் என்பதே பொருள். மனிதர்களாய்த் தலைநிமிர்ந்து வாழ்ந்து, தரித்திரத்தை அநுபவிக்கத் தயாராக

இல்லாமல், அடிமைகளாக இருந்தாவது அவர்கள் சுகம் பெற விரும்புகின்றனர். அடிமைத்தனம் அவர்களுடைய ஆன்மாவில் ஊறிப்போயிருக்கிறது. நாம் முற் போக்கடைய வேண்டுமானுல் இந்தத் தீய காரியத்தை எதிர்த்துப் போராடவேண்டும்.' — மாக்ஸ்வினி.

8. பெண்கள் :— 'உலகில் பாதி ஆண்கள்; பாதி பெண்கள். நமது மகளிர் நல்ல வீரரை ஈன்றளிக்க, உலகில் நம் நாடு பழம்பெருமையடைய முதலில் நமக்கு உரிமை வேண்டும். ஓர் நாட்டில் பெண்களின் நிலையைக் கொண்டு அதன் உயர்வினையும் உரிமையினையும் கணக்கிட்டு விடலாம்.' — காந்தி.

'பொதுவாகப் பெண்கள் அமைதி, மரியாதை, அறிவு, அன்பு, இரக்கம் ஆகிய குணங்களைப் பெற்றிருக்கிருர்கள். இந்த அரிய குணங்கள் ஒரு பெண்ணிடம் மிகுதியும் செறிந்து விளங்குவதோடு தைரியமும் துணிவும் பொருந்தி விட்டால் அவளே வீரப்பெண் ஆவாள்.'

— மாக்ஸ்வினி.

மேற்கண்ட எட்டுத் தலைப்புகளிலும் ஐர்லாந்தின் மகாத்மாவும் நமது மகாத்மாவும் எங்ஙனம் மிகவும் ஒன்றுய் விளங்குகின்றனர் எனக் காண்கிரும். மாக்ஸ்வினி நமக்குப் புதியவராதலாலும் (இக் கட்டுரை யளவில்), அவரைப்பற்றி யறியவேண்டுவதே முதன்மை யாதலாலும் அவர் கொள்கைகளை விரித்தும், பல புதிய கொள்கைகளைச் சேர்த்தும் (இங்குக் குறித்த காந்தியடி களின் கருத்துக்களினும் வேருனவை) விளக்கப்பட்டது. ஆனுல் அப்புதிய கருத்துக்கள் முழுதும் காந்தியடிகளின் கருத்துக்களுமாகும் என்பதனை நாம் யாவரும் அறிவோம் என்பதற்காகவே அவர் மூலம் அக்கருத்துக்களை ஆராய்ந்தோம்.

இத்தகைய சிறந்த பெரியோர் வாழ்வினை ஆராய்வதும், அவற்றைத் தொடர்வதும் ஒரு நாட்டின் விடுதலைக்கும் நன்னிலைக்கும் வழிகோலுவதாகும். இந்தியா இன்று விடுதலைப் போரின் வெற்றி நிலையத்தை அடைந்து விட்டது என்றால் அது மாக்ஸ்வினி போன்ற நமது மகாத்மாவின் வாழ்வினை ஆராய்வதும், பின்பற்றுவது மட்டுமல்ல, அவரையே நாம் தலைவராகப்பெற்றதனாலேயே என்பதில் இந்தியா பெருமிதமடைகிறது. உலகம் மனமார வாழ்த்துகின்றது.

அதேபோல இன்றைய ஐர்லாந்தின் உயர்நிலைக்கு மாக்ஸ்வினியின் — ஐர்லாந்தின் மகாத்மாவின் — மெய்யறிவும் தொண்டுமே வழிகாட்டிகளல்லவா?

---

# உலவும் காந்தி

## காந்திஜி மறைந்தார்.

உலகில் உடல்பெற்றுலவிய அன்பும் உண்மையும் மறைந்தன. 'அவர்தம் உடல் மறைந்தாலும் உணர்ச்சி அழியாதது; அதனைப் பின்பற்றுவோம்' என யாவரும் ஆறுதல் கூறுகின்றனர். யான் இந்நாட்டின் தலைவனல்லன்; அன்றி உலகில் ஒரு அறிஞனுமல்லன். இந்தியாவில் மிகப்பெரும்பான்மையான ஏழைஅறிவினருள் ஒருவன். அவர்கள் சார்பில் எனக்கு இந்த ஆறுதல் வெறும் ஏமாற்ற மொழிகளாகவே தோன்றுகின்றது காந்திஜியின் உயிர் அதாவது உணர்ச்சி அழியாதுள்ளது; உணர்ச்சியுலகிற் கலந்து நிறைந்து எங்கும் பரவியுள்ளது உண்மை. அவர்தம் அறிவில் ஓரளவேனும் உடையவர்தம் உணர்ச்சி அவ்வுலகில் அடிக்கடி உலவிவரும்' என்பதுண்மை. ஆனல் ஏழை மனிதன் என் செய்வான்? ஏன், மனித இனந்தான் என் செய்யும்? 'காந்தியுணர்ச்சி' அழியாதது; ஏன், எந்த உலகப் பேரறிஞன் உணர்ச்சிதான் அழிந்துவிட்டது. இயேசு, புத்தர், நபி, வள்ளுவர் யாவர் உணர்ச்சியும் அழியாமலேயுள்ளன. காந்தியுணர்ச்சி என்பது தனிமையானதா? புத்தர், மாஜினி, டால்ஸ்டாய் இம்மூவர் உணர்ச்சியின் கலப்புருவந்தானே? காந்தியுணர்ச்சியைக் கவரும் திறன், நுட்பம் நமக்கிருந்தால் மற்ற முற்கூறிய நல்லோர் உணர்ச்சியும் பெற்றிருப்போமே! காந்தி தோன்ற வேண்டுவதில்லையே! எத்தனை நல்லோர் உணர்ச்சியை மறந்து ஏமாற்றி வசங்கண்டது இம்மூடவுலகம். ஆகவே உணர்ச்சியால் இந்தியா உயரும் என்பது வெறுமயக்கே.

2000 ஆண்டுகளாய் எவ்வளவோ முன்னேறியுள்ளோமென்று பெருமைகொள்கிறது மனித இனம். 2000 ஆண்டுக்குமுன் ஆராய்ந்தே எதனையும் நம்ப வேண்டுமென்ற சாக்ரடீஸைக் கொன்ற மனிதனே இன்று

அன்பால்தான் உலகை வெல்லவேண்டுமென்ற காந்திஜியைக் கொன்ருன். ஆகவே அறிவாக்கத்துறையில் இன்னும் அதேயிடத்தில்தான் மனித இனம் உள்ளதெனத் தெரிந்துவிட்டது. மனித இனத்தே பெரும்பான்மையோர் 'மனித உடலேத்தான்' நினைவுகொண்டு வாழ்கின்றனர். அடிக்கடி மனித உடலிலுள்ள 'மனிதத் தன்மையை' நினைவூட்ட மாமனிதன் தோன்றுகிருன். அவன் மனித உணர்ச்சியின் மிக உயரச்சென்ற கொழுந்து. பொருமை மாருத உலகம் அந்தத் தனிச் சிறப்புக் கொழுந்துகளைக் கிள்ளி எறிந்துகொண்டேயிருக்கிறது.

**மெய்யறிவே மனிதன்**

அறிவென்பது உலக ஒற்றுமை. 'உலகந்தழீயது ஒட்பம்'. எவ்வினத்தையும், இன்றைய அரசியல் மொழியில் எக்கட்சியையும் எவன் ஒன்றுபடுத்த வாழ்கிருனே அவனே அறிஞன்; மனிதன். அதைத்தவிர மனிதன் பண்பாடென்பது வெறுமயக்கம். பண்பு என்பது எண்பதத்தால் எய்வதொன்ரும். எக்கட்சியினரும் ஒருவனிடம் எவ்வளவு கருத்து வேற்றுமைக்கிடையிலும் உண்மைப் பற்றுடன் எப்போது நெருங்க முடிகிறதோ அப்போதே அம்மனிதன் பண்புடையவனுகிருன். காந்திஜி உயர்ந்த பண்புடையவர். அவரிடம் எக்கட்சியினரும் குழந்தைகளைப்போல் பழகினர். அவர் இறப்பைத் தம் தந்தையினும் பெரும் இழப்பாகக்கொண்டு கலங்கினர். அவர் ஒருவரிடமே எக்கட்சியினரும் நெருங்கி ஆராயவோ மனம் விட்டுப் பேசவோ முடிந்தது. காரணம் அவரிடம் 'ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம், தங்கட்சியின் குற்றத்தைக்' காணும் பேரறிவிருந்தது. இமாலயக் குற்றஞ் செய்தேனென உலகறியச் சொல்லித் திருந்தும் உயர்பண்பு இருந்தது, பெரும்பற்றுடைய காங்கிரஸையும் நாடறியக் கண்டிக்கும் நலனிருந்தது. இங்ஙனம் குற்றமுணர்வோனே சுற்றமுணர்வான். இவ்வுணர்ச்சியே பகைவனிடமுள்ள நன்மையைப் பகுத்துணர்த்தும்; தன்னிடமுள்ள தீமையைத் தெளிவுறுத்தும். இல்லையேல் தனது தீமையையும் மாற்ருன் நலத்தையும் மறைத்து

நமது நன்மையொன்றையே மாற்ருன் தீமையொன்றையே வெளிக்காட்டும். இங்கிலேயாற்ருன் உலகில் மிடமை நிலேக்கிறது; வேற்றுமை, அடிமை வாழ்கின்றன. உலகப் போர்கள் அடிக்கடி மூள்கின்றன. ஆகவே 'தம் குற்ற நீக்கிப் பிறர் குற்றங்காட்டும்' பெருங்குணம் மனிதர்க் குயரும் நாளே மாண்புயரும் நாளாம். அந்த மாண்பை இந்தியாவில் விளக்கிய ஏந்தல் மறைந்தார்!

அவர்தம் தனிவாழ்க்கை நாட்டில் தளிர்க்கும் நாளே முன்னேற்றம் தளிர்க்கும் நாள். அவர் வாழ்வு மிக எளிதே. ஆனல் இன்றைய உலகில் மிக மிகச் சிலரே பின்பற்றிய பெரும் அருமையானதாம் அவ்வாழ்வு இந்தியாவின் பழம் பண்பு; முன்னேர் கண்ட வாழ்வு, இன்றையோர் ஏத்திய வாழ்வு, ஆனல் இயற்ரு வாழ்வு! அவர் வாழ்ந்துணர்த்தியபடி தன் மலத்தையும் தானே தூய்மைப் படுத்தும், அரிஜனன் ஒருவனைத் தன்னுடன் வைத்து வளர்க்கும், மனப்பாங்கு வருமானல் நாட்டின் நூறுசாதி நொறுங்கித் தொலேயாதா? உயர்வு தாழ்வு ஓடி மறையாதா? உணவுக்காக அவரிழைத்த செலவில் நாட்டின் செல்வரெல்லாம் உணவுத்திட்டத்தைக் கொண்டால், தம்மிடமுள்ள மற்றப்பொருளே நாட்டிற் குதவினல் பட்டினிப் பஞ்சமேது? வேலே நிறுத்தமேது? பொதுவுடைமைப் புரட்சியோ அரசோதான் எதற்கு? நம் நாட்டில் இல்லாவிட்டாலே அதுவும் இன்றியமையாதா ஞற்ருன், பிறநாட்டுப்பொருள் வாங்குவதென்ருல் நாம் ஆடம்பரமாக வாழத்தான் முடியுமா? பொருளாதாரத் திட்டங்கள் தேவையே இல்லேயே! அப்பெரியாரைப் போலக் குடிசையிலேயே வாழ்ந்து, காலே $3\frac{1}{2}$ மணிமுதல் நாட்டிற்கே உழைத்தால் அதனினும் அமைதியும் புண்ணியமும் இன்பமும் வீடுந்தான் வேறுண்டா? எல்லாக் கட்சியையும், சமயத்தையும் இணைத்தே நோக்கும் இயல்புண்டேல் அதனினும் மனிதவுள்ளம் வேறேது? இவ்வாழ்க்கைநிலே முடியாததன்று. ஆனல் இன்று நாட்டில் உலகில் எத்தனே பேர் நாள்வாழ்வில் இயல்கிறது? ஆகவேதான் அவர் தனிவாழ்வு சிறப்புடையதானது;

அவரை உலகம் போற்றுகிறது. அரசியலில் அவர்கண்ட வெற்றியிலும் தனிவாழ்விற்கண்ட வெற்றியே அவரது இன்றைய பெருமைக்குப் பெருங்காரணம். அவரது அரசியல் வெற்றி நாட்டில் உரிமை கொணர்ந்ததும் முடிந்தது. ஆனல் 'தனிவாழ்வு வெற்றி' நாட்டில் ஓவ்வொருவரும் அப்படி வாழும்வரை முடியாததாம்; வெல்லாததொன்றும். நாட்டின் பெரும்பான்மையேனும் அப்படி வாழ்கையிற்றன் உரிமை உண்மையாகும். அதற்கேதான் அவர் 125 ஆண்டு வாழ நினைத்தார். வந்த உரிமை உண்மையானதன்றென அதனை, தான் மகிழ முடியாதென மறுத்தார். இன்னும் அரசியல், சமூகத் துறையில் எவ்வளவோ வெற்றி வேண்டும் எனக் கடைசி யிலும் கூறினர். தனிவாழ்வில் விளையும் ஒற்றுமை யில்தான் இந்து — முஸ்லீம் ஒற்றுமை காணுமெனக் கடைசியிலும் உண்ணு நோன்புகொண்டார். ஆகவே அம் மாமனிதர்தம் தனிவாழ்வு, எளிதாய்த்தோன்றினும் அருமையானதொன்றும். அதனை வளர்ப்பதன்மூலமே வருங்கால இந்தியாவைப் படைக்க முடியும். அதனை அவர்தம் உணர்ச்சி கொண்டுவராது. உணர்ச்சி இந்தி யரின் மானங்காக்கத் தென்னுபிரிக்காவிற் பல்லுடை படுமா? அரிஜனங்கட்கும் முஸ்லீம்கட்கும் ஒற்றுமைக்காக உண்ணுநோன்புகொண்டு வாடுமா? உரிமைக்காகத்தடி யடியும் சிறையும் படுமா? கலவரம் ஓய, கல்லிலும் முள்ளிலும் கால்நோகக் கிழத்திலும் நடக்குமா? உலக அறிஞர்க்கெல்லாம் உறுதிமொழி கூறுமா?

உணர்ச்சி பெரும்பான்மை ஏழைகளை, மனிதரை வாழ்விக்காது. உணர்ச்சி பொக்கைப்பல்லால் சிரிக்க வேண்டும்; இனிதாய்ப் பேசவேண்டும்; நடக்கவேண்டும்; ஏழையைத் தாழ்ந்து வணங்கவேண்டும்; உடல்கொண்டு அவ்வுணர்ச்சி உலவவேண்டும். ஆகவே 'உலவும் காந்தி' வேண்டும்.